திராவிடம்



T21173
R004F02

தஞ்சை ராமநாதஞ் செட்டியார் ஹாலில்

K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடக சபா

"வேலைக்காரி"

கதை, வசனம்

C. N. அண்ணாத்துரை M. A.

அமைப்பாளர் :	ஆசிரியர் :
டி. பி. பொன்னுசாமி	**M. S. முத்து கிருஷ்ணன்**
ஓவியர் :	பாடலாசிரியர் :
மாதவம் பிள்ளை	**உடுமலை நாராயண கவி**
மானேஜர் :	உரிமையாளர் :
P. V. எத்திராஜ்	**K. R. ராமசாமி**

தினசரி நாடகம் நடைபெறுகிறது.

(திங்கள் தோறும் நாடகமில்லை)

திராவிடம்

[மாத வெளியீடு]

பொருளடக்கம்

எழில் மலரே சிரிக்கின்றாய்	...	கவி. பாரதிதாசன்
நமது பாதை	... ...	ஆ. அண்ணாமலை
முகப்புப் படம்	... ...	ரா. ரங்கநாதன்
வாழ்க திராவிடம்	... ...	க. அன்பழகன், M.A.,
ஜன்னலுக்கப்பால்	... ...	தி. க. சீனிவாசன்
வளர்க நின்புகழ்	... ...	ச. நெடுமாறன்
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க	...	அருந்தமிழ் தோழன்

I

பதிப்பாசிரியர் :

ஆ. அண்ணாமலை

அணு நான்கு

திராவிடம் காரியாலயம்

59, மணியக்காரத் தெரு

திருச்சி

"எழில் மலரே சிரிக்கின்ருய்"

புரட்சிக்கவி பாரதிதாசன்

கோடையிலே இடருற்றேன்; நெஞ்சு நெருப்பானேன்
குளிர்புனலே, தூய்மையினைக் கொண்டுவரும் புனலே,
ஓடையிலே ஒளிதழுவி ஓடிவரும் புனலே
உன்கொடை நன்ருகும்; உள்ளமெலாம் குளிர்ந்தேன்
ஆடையிலே நெருப்பேறி உடல்தீய்க்கும் போதும்,
அழுக்குடைய புழுக்குடைநீர் காணுதற்கும் ஒப்பேன்.
தேடையிலே கிடைக்காத செம்பொருள் கண்டாலும்,
செந்தமிழின் பகைவரிடம் சேருவாரோ தமிழர்?
வாழைப்பூக் கொப்பூழின் ஒளிசிறகு வண்டு,
மல்லிகையே உன் துளியைப் பெரிதென்று பாடும்;
ஈழத்துப் பனங்கள்ளும் சிறிதென்று தூற்றும்!
எழில்மலரே சிரிக்கின்ருய்! இன்னும் கேள் இதனைப்
பேழையிலே பணம்படைத்தோன் தமிழர்
பகையாயின்
பெரும் பணத்துக்கே அவர்பால் ஆட்படுதல் இல்லை.
தாழைமடல் தொன்னையிலே கூழ்தரு வாரேனும்
தமிழர்பணி பெரிதென்று பாடாரோ தமிழர்?

என் எண்ணம்

நமது பாதை :—தன்மான இயக்கத்தந்தையின் திட்டத்திலே மலர்ந்தது திராவிடம். ஆம், பல்லாண்டு களாக பாடுபட்டும் பலனின்றி பஞ்சையாய் பிறந்த கத்திலேயே......வாழவழிவகுத்த வேதிய குலத்தின் வாழ்விற்கு வெடிவைத்த வைக்கம் வீரர் காட்டும் பாதையிலே, தன்னைமறந்து தூங்கும் திராவிடனைத் தட்டிஎழுப்பி அழைத்துச் செல்லுவோம்! வழிநெடுக வேதியக்கூட்டம் வைத்த வெடிகளை, பெரியார் தரும் பகுத்தறிவு கருவி கொண்டகற்றி, "இன்ப திராவிடம் இதோ"? அதற்கு இந்த அண்டத்திலே இல்லை ஈடு! அதனை நீநாடு. அவ்வாக்க வேலையிலே ஆரியம் உனக்கு தரும் அல்லல் ஆடிக்காற்றிலே பறக்கும் பஞ்சைப் போல, பறக்கும். அதற்குப் பின்னே சோற்றுக்கு இல்லாமல் சிறைக்குச் செல்லும் திராவிடனை காண முடியாதென கழறும் தன்மானத்தந்தையின் உணர்ச் சியுள்ள உரையின் கருத்தை நினைவூட்டுவோம். நினை வை செயலாக மாற்ற, பெரியார் நாட்டிலே பட்ட பாட்டை நினைவூட்டுவோம். அந்த நினைவு இளைஞர் களின் இதயத்திலே இடம்பெறச்செய்தலே திரா விடத்தின் தோற்றம்.

கருப்புச்சட்டை என்றால் அது பண்படா கூட் டத்தின் போர்வைஎன மேம்புல் மேயும் நிலையிலே நின்று நினைக்கும் மாற்றுக்கட்சி திராவிடனை தோழ மையில் அழைத்து கருப்புச்சட்டை என்பது அழிந்து போன சமூகத்தை ஆக்கமுறச் செய்யும் இலட்சிய வாதிகளின் அடையாளம். அவர்கள் வாழ்விலே தாழ்

வை மேற்கொண்டாலும் அவர்கள் நினைவிலே நிற்பது தலையாய தமிழர் நாகரிகத்தை தாழ்த்திக்கூறிய வேதியகுல வேந்தனை கனக விசயன் தலையிலே கல்கொணர்ந்த சேரன் செங்குட்டுவன் காலத்திய வீரசுதந்திர வாழ்வை திராவிடத்திலே தோற்றுவிக்கத்தோன்றிய தென்பதை எங்கள் சொல்லிலும், செயலிலும்பார்! விடுதலையை வாழ்க்கையிலே மக்கள் மேற்கொள்ள கருப்புச்சட்டைக்காரர்கள் பணிபுரிகிறபோது, மறைவிலே நின்று கற்களை வீசியும், கத்தியை நீட்டியும், வஞ்சகத்தை வாழ்க்கையிலே கொண்ட கூட்டத்தின் உதவியால், சமயத்தில் சட்டத்தை துணைக்கழைத்து சிறையிலே தள்ளும்போது கூட தண்டனைதரும் வேதனையை அறியாது முகத்லே முருவலைக்காட்டும் கருப்புச் சட்டைக்காரனைப் பார்!

அதேசமயத்திலே தள்ளாத நேரத்திலே நிமிர்ந்த நடையுடன் தடியூன்றி நடக்கும் திராவிடத் தந்தை ஆயிரமாயிரமாய் ஆவலுடன் திராவிடர் குழுமியிருக்கும் கூட்டங்களிலே பேசும் பொருப்புள்ள பேச்சுக்களைப்பார்! பார்த்ததற்கு பின்னே நெஞ்சிலே கையையவை. நமது நலிந்த வாழ்வு மீண்டும் மலர பெரியாரின் பேச்சிலே மலர்ந்த கருத்தைப்பற்றி நினை! நினைக்கும்போது நேர்மையை துணைக்கொள். அது உன் பாரம்பரிய பண்பாட்டிலே மிளிரப் பெருமைக்குரிய பெரும் பேறு. அது பேறுமட்டுமல்ல உன் கடன்! கடனை நிறைவேற்றத் தயங்காதே; தயங்காதே என்ற அடிப்படையிலே தோன்றியது திராவிடம். திராவிடம் இலட்சிய முரசு! திராவிடத்தின் இலட்

சிய முரசு மீண்டும், மீண்டும் திராவிடத்திலே கேட்க திராவிடர்களின் துணை இன்றியமையாதது. அதை அன்பர்கள் நல்குவார்கள் என்ற நினைப்பிலே திராவிடத்தை திராவிடர்களின் கரத்திலே நீட்டுகின்றேன்.

முகப்புப் படவிளக்கம்:—

ரா. ரங்கநாதன்

திராவிடத்தின் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் உருவம் முகப்பிலே தீட்டப்பட்டிருப்பது கண்டதும் சிலர் கேளிக்கையும் பலர் புன்னகையும் புரியலாம். அது இயற்கை. நாங்கள் முகப்பிலே தீட்டியதின் நோக்கம் அவரது தளராத உழைப்பினை அறிந்தும், 4½ கோடி திராவிட பழங்குடி மக்களை வழிநடத்திச் செல்லும் ஒரு தலைவர் என்ற காரணத்தினாலும், சேலம் பாசறையிலே திரண்டுகூடிய திராவிடமக்கள் இனி எங்கள் வாழ்க்கையை வளமுறச் செய்யும் தகைமைசால் தலைவர் என்று எழுப்பிய முரசொலியை அறிந்தும், பட்டதாரிகள் கூட்டத்தையும், பாமரர்களுக்கும் தங்களுக்கும், தொடர்பில்லா சுயநலக் கூட்டத்தையும் ஒதுக்கி திருச்சி பாசறையிலே வெற்றியினைப் பெற்று உலவியதின் காரணம்தான் இன்று நம் "திராவிடத்தின்" முகப்பிலே சிந்தனைச் சிற்பியின் சின்னத்தை தீட்டியதின் நோக்கம். முதிர்ந்த வயதும் தளராத உள்ளமும் படைத்த மாவீரர்! மனதின்கண் பட்டதை மறைக்காது உரைக்கும் மன்னன்! பட்டிதொட்டி சென்று பாமரனும் படித்தவனும் புரியும்படி பல்லாண்டு அஞ்சாது பணிபுரியும் சீர்திருத்த செம்மல். பன்முறை சிறைச் சென்றும் ஒரு முறையும் தம்முயர்ச்சியில் தோல்விகாணுச் சிங்கம். செல்வமென்னும் களியாட்டில் அயர்ந்தவர்; உண்டாட்டில் திளைத்தவர்; வெயில் படாது வாழ்ந்தவர்; ஈரோட்டு வேந்தரென விளங்கியவர். வறியார் போல் எளிய உடைதரித்து எளிய உணவு உண்டு இரவு பகல் ஓயாது இயக்கத்திற்கே தன்னை அர்ப்பணித்தவர். தன்மான இயக்கத்தந்தை, தமிழ்காத்த தலைவர். அரும் பெரும் குணங்களும் ஒருங்கே அமைந்த அண்ணல் அவர்.

வாழ்க நம் பெரியார்!	வாழ்க நம் தமிழர்!
வாழ்க நம் திராவிடம்!	வாழ்க நம் வைக்கம்வீரர்!

“வாழ்க திராவிடம்”

க. அன்பழகன் **M. A.**

நாம் பேசுவதும் எழுதுவதும் தமிழ்; நாம் போற்றுவதும் வளர்ப்பதும் தமிழ்க் கலை; நாம் வாழ்வதும் வாழ்த்துவதும் தமிழ் நிலம்; நமது மன்னர்கள் அன்று ஆண்டதும், நமது மக்கள் இனி ஆளவிருப்பதும் தமிழ்நாடு; இவ்வளவையும் விட்டுவிட்டு மொழியையும் நாட்டையும் எண்ணிப்பாராமல், ‘திராவிடமாம், வாழ்கவாம், நடக்குமா?’ என்று கேட்கவேண்டிய நிலையிலே பலர் உள்ளனர் இன்று.

இதற்கு முன்போ நிலைமையேவேறு. ‘தமிழ் வாழ்க’ என்றாலே பிறவெல்லாம் வீழ்வதா? என்று வம்புக்கு இழுப்பவரும், “தமிள் வால்க” என்று ஏளனத்திலே இறங்குபவரும், வஞ்சகத்தோடு ஓரச்சிரிப்புடன் ஒதுங்கிச் செல்பவரும் எனப் பலப்பலர் காணப்பட்டனர். ‘தமிழ் நாடு’ என்று காதிலே பட்டாலே, ‘மற்றதெல்லாம் காடு! இதுமட்டுந்தானா நாடு’ என்று எள்ளுபவரும், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று விண் அதிர முழங்கினாலும், அதைக் காதிலே போட்டுக்கொள்ளாதவரும், காதிலே விழுந்தாலும், சிந்தனையைச் சிறிதும் செலுத்தாதவரும், யாரேனும் சிந்தித்துவிடப் போகிறார்கள் என்று எண்ணிப் பாரதமாதாவின் பஜனைப் பாட்டின் தொனியை எழுப்புவதோடு பக்தியிலே கவனமூட்டுபவரும், எவரேனும் சிந்தித்து இருந்தால் என்ன செய்வது என்று எண்ணி எலியைத் துணைக்கழைத்து ‘எலிவளை எலிகளுக்கே’ என்று கேலி செய்பவரும் எனப் பல திறத்தார் தமிழ் நாட்டிலேயே நிறைந்திருந்தனர்.

இன்றோ நிலைமை மாறி வருகிறது. ஓரளவிற்கு மாறிவிட்டது. இன்று ‘தமிழ்’ எவராலும் இகழப்பட முடியாத

நிலையைப் பெற்றுவிட்டது. 'தமிழ்நாடு' மக்களுடைய உள்ளங்களிலே இடம் பெற்றுவிட்டது. சொல்லளவிலேனும், தமிழ்நாடு தமிழருக்காகி வருகிறது. 'எலிவளை எலிகளுக்கே' என்று கேலிச் சித்திரம் தீட்டியவர்களும் எந்த எண்ணத்தாலோ, தமிழ்நாடு தமிழருக்கே' என்பதை ஒப்புக்கொள்வதாகக் கூறுகின்றனர்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற குரல் இன்று பல திசைகளிலே கேட்கப்பட்டாலும், அதை முதலில் எழுப்பிய பெருமையும் எதிர்ப்புக்களுக்கும் ஏளனங்களுக்குமிடையே வளர்த்த சிறப்பும், தமிழர் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களுக்கே உரியதாம். தோழர். இராசகோபால ஆச்சாரியார், சென்னை மாகாண முதலமைச்சராக அமைந்து, வடநாட்டு இந்தியை வலுக்கட்டாயமாகத் தமிழ்ச் சேய்களின் வாய்களிலே திணித்தபோது, அந்தக் கொடுமையை எதிர்த்துப் பெரியார் இராமசாமி நடத்திய பெரியதொரு போராட்டத்தின் சிறந்ததொரு விளைவாகத் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற உரிமையொலி அன்று எழுந்தது. அந்த ஒலியின் எதிரொலிகளே, எட்டாண்டுகளுக்குப் பின்னுல் இன்று கேட்கப்படும் ஒலிகளாம். என்ருலும் 'எதிரொலி' யைக் கேட்கும்போது வெற்றியை நினைந்து மகிழாமல் இருக்க முடியாது.

அன்று எதிர்க்கத் துணிந்தவர்களும், ஏளனம் செய்தவர்களும் இன்று ஆதரிப்பதைக் கண்டோம். காரணம் என்னவென்று எண்ணிப் பார்க்க வேண்டும். வைதீக மனப்பான்மையோடிருந்தால் 'எல்லாம் காலவித்தியாசம்' என்று ஒரே தொடரில் காரணத்தை முடித்துவிடலாம். காலமாற்றத்தில் தேய்வும் வளர்ச்சியும் நிகழ்வதை நாம் அறிவோம் என்ருலும், இதனுல் காரணம் கண்டுபிடித்தவர்களாக மாட்

டோம். அன்று, "தமிழ்நாடு தமிழருக்கே" என்று கூறியவர்கள், பெரியார் இராமசாமியின் படையினர். காங்கிரஸ் விரோதிகள், தேசத் துரோகிகள்,—இன்று கூறுபவர்கள், காங்கிரஸ் தோழர்கள், தேசத்தியாகிகள் என்றும்; அன்று அந்நிய பிரிட்டிஷாரின்பிடி விடுபடும் என்ற நம்பிக்கையற்ற நிலைமை,—இன்று வெளிநாட்டு வெள்ளையர் வெளியேற விடைபெற்றுக்கொள்ளும் நிலைமை என்றும்; எனவேதான் அன்று எதிர்த்தவர்கள் இன்று ஆதரிக்கிறார்கள் என்று பலர் கருதலாம். ஆனால் என்றாவது ஒருநாள், நடைபெற்றே தீரவேண்டிய, நியாயமான ஒரு கொள்கையைக் காலநிலை ஒத்துவரவில்லையென்றோ, எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்றோ, ஏற்றுக்கொள்ளாதது மட்டுமன்றி எதிர்ப்பதும், ஏளனத்திற்காளாக்குவதும் எப்படி நியாயமாகும்?

அன்று, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம், வகுப்புவாத உணர்ச்சியோடு எழுப்பப்பட்டதென்றும், அதனாலேயே ஆதரவு பெறவில்லையென்றும், மறையவும் நேரிட்டதென்றும், இன்று பொது மக்களாகிய தமிழரின் நலங்கருதி, தமிழ்நாடு முன்னேற, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முரசொலி கிளம்பியுள்ளதென்றும், எனவே ஆதரவு பெறுவது இயற்கையென்றும், இருதிங்களுக்கு முன்பு ஒரு ஆரியப் பத்திரிகை எழுதியுள்ளது.

அன்று தோன்றிய இயக்கம் மறைந்துவிட்டதா? என்பதும், எது வகுப்புவாதம்? என்பதும் தனி விளக்கத்துக்குரியன. ஆனால், இதிலிருந்தே "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கமே, அன்று தொனித்த முறையும், இன்று தொனிக்கும் முறையும் சிறிது வேறுபட்டுள்ளன என்பது விளங்கும். பொதுவாக உச்சரிப்பும், பொருளும் ஒன்

றென்றாலும். உச்சரிக்கும்போது ஏற்படும் சிறு வேறுபாடும் 'உணர்ச்சியிலே' அதன் விளைவைத் தோற்றுவிக்காமலில்லை.

"தமிழ்நாடு தமிழருக்கே" என்ற ஒரே தொடரே உச்சரிக்கும்போது, 'தமிழ்நாடு' என்பதை அழுந்தச் சொல்லுவதும் 'தமிழருக்கே' என்பதை அழுந்தச் சொல்லுவதுமென இருவகைப்படும். அந்த வகைகளிலே 'தமிழருக்கே' என்பதை அழுந்தக் கூறியவர்கள் பெரியார் இராமசாமியைச் சேர்ந்தவர்கள். 'தமிழ்நாடு' என்பதை அழுந்தச் சொல்லுபவர்கள் இன்றைய இயக்கத்தார்.

அன்று அன்பர் ஆச்சாரியார் ஆட்சி அமைந்ததால் ஏற்பட்ட தீமைகளையும், தமிழ் நாட்டில் பற்பல நூற்றாண்டுகளாகவே ஆரிய ஆதிக்கம் ஏற்பட்டுத் தமிழர் வாழ்வு தாழ்ந்ததையும், தமிழ்மொழியும் கலையும் சிதைந்ததையும் உணர்ந்த பெரியார் இராமசாமி அவர்கள், தமிழர் வாழ வேண்டுமானால், ஆரிய ஆதிக்கம் ஒழியவேண்டுமென்றும், இனி எக்காலத்தும் ஏற்படக்கூடாதென்றும், அந்த நிலையை ஏற்படுத்தும் ஒரு மூலமொழியாக, எழுச்சித் தொடராகத் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதை முழக்கினர்.

இன்று ஆந்திரகேசரி பிரகாசம்காருவின் ஆட்சியால் ஏற்பட்ட விளைவாலும் ஆந்திரத்தார் தம் மாகாண எல்லையில் தமிழ் நிலத்தின் சில பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள நினைப்பதாலும், இயற்கையிலே தமிழ்நாடு ஒரு தனி மாகாணமாகப் பிரிய இருக்கின்ற நிலைமையாலும், அப்படிப் பிரியும் தமிழ் மாகாணத்தின் பரப்பு எக்காரணத்தாலும் குறைய விடுவது முறையல்ல என்ற எண்ணத்தாலும், வடக்கெல்லையினுள் சில பகுதிகளை ஆந்திர மாகாணத்தில் சேர்த்துக் கொள்ள இடந்தருவதோ, தெற்கே நாஞ்சில் நாட்டை

திருவாங்கூர் ஆட்சியிலே இருக்க விடுவதோ, புதுவையும் காரையும் பிரெஞ்சு ஆட்சி காரணமாகப் பிரித்துவைக்க இடமிருப்பதோ கூடாது, முறையாகாது என்ற எண்ணத் தாலுமே பல தோழர்கள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழங்கத் தொடங்கியுள்ளனர்

'தமிழ்நாடு' என்பதை அழுந்தக் கூறும் தோழர்கள் சொல்லும் இந்தக் கருத்துக்களைத் தமிழ் மக்கள் பெருவாரி யாக வாழும், தொடர்ச்சியாக அமைந்துள்ள தமிழ்நிலப் பரப்பு முழுவதையும் ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வர வேண்டும். என்று பெரியார் இராமசாமி அவர்கள், அந்தக் காலத்திலேயே கூறியிருப்பதோடு, "திராவிடநாடு திராவிட ருக்கே" என்று முழக்கும் இக்காலத்தும்—இந்துக் கொள் கையையும் உள்ளடக்கியேதான் கூறிவருகிறார்கள். "திரா விடநாடு" என்று குறிப்பிடப்படும் திராவிட ஐக்கியக் குடி யரசுகளில், ஒரு பகுதியான 'தமிழ்நாட்டுக் குடியரசு' மேலே சொல்லப்படும் கொள்கையின்படியே அமைக்கப்பட வேண் டும் என்பதையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை. "தமிழ் நாடு தமிழருக்கே'' என்பதில் தமிழ்நாட்டு நிலப்பரப்பும் எல்லையும் குறித்து எந்த வேறுபாடும் காணப்படவில்லை. ஆனல் ஆளப்போவது யார்? என்பதற்குத்தான் விடை வேண்டும். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறினல் ஆளப்போகிறவர் தமிழர் என்றுதானே அர்த்தம் என்று எளிதாகக் கூறுவர் பலர். நமக்கும் தெரியும் தமிழ்நாடு பிரிந்துவிட்டால், தமிழ் நாட்டில் தெலுங்கரோ, மலையா ளியோ, மந்திரியாகக்கூட வரமாட்டார்கள், என்ற பொது வுண்மை. ஆனல் தமிழ்நாட்டை ஆளவேண்டிய தமிழர் யார்? என்று கேட்டாலோ தமிழ்மொழி பேசும் யாவருமே

தமிழர்'' என்றுரைக்கின்றனர் இன்று ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று முழக்குகின்றவர்கள்.

அப்படியானல், இன்று தமிழகத்தில் வாழ்ந்து தமிழ் மொழியைப் பேசும் அனைவரும் தமிழ்ப் பண்பாடு உடையவர்கள் தானு? என்று எண்ணிப் பார்க்கட்டும். தமிழ்ப் பண்பாட்டோடு வாழாவிடினும், தமிழ்ப் பண்பாட்டை அழிக்காமலாவது இருந்திருப்பின் 'தமிழர்கள்' என்று புதிதாகவேனும் ஒப்புக்கொள்வதிலே ஒன்றும் பேரிழப்பு இல்லை என்று கருதலாம். அதற்கேனும் இடமுண்டா?

இன்று தமிழகத்தில் வாழும் பார்ப்பனர் பேசுகின்ற நகைத்தற்கிடமான தமிழ்ப் பேச்சுமுறை ஒருபுறமிருக்க, தமிழ் பேசுவதால் மட்டும் எவ்வாறு தமிழராகிவிடுவார்? G. U. போப், பெஸ்கி போன்ற மேல்நாட்டவர்கள், தமிழ் பேசியும் எழுதியும் வந்ததால் மட்டுமன்றித் தமிழ் மாணவராகவே தமிழ்ப்பற்றுமிக்குத் திகழ்ந்திருப்பினும், 'தமிழர்கள்' என்று கருதிவிட முடியுமா? மறைந்த வலங்கைமான் சீனிவாச சாத்திரி, சத்தியமூர்த்தி போன்றவர்கள் பெற்றிருந்த ஆங்கிலப் பேச்சுவன்மையினுலேயோ, அன்றித் தம் தாய்மொழியினும் அதிகமாக ஆங்கிலத்தில் பயிற்சிபெற்றிருந்ததனுலேயோ, 'ஆங்கிலேயர்' என்று கூறமுடியுமா? அவர்களைச் சார்ந்தோர்தான் ஒப்புக்கொள்வார்களா? ஆங்கில நாட்டார்தான் ஏற்பார்களா? மற்றும் தமது தாய்மொழி சமஸ்கிருதமென்றும், அவ்வடமொழி தமிழினும் உயர்ந்ததென்றும், ஆரிய வேதமே ஆண்டவனுக்கு உகந்ததென்றும், தமிழ் நூல்கள் தாழ்ந்தனவென்றும் கூறும், கூறத்துணிவில்லாவிடினும் கருதும் பார்ப்பனர்கள் தமிழ் மொழியைப் பேசுவதனுலோ எழுதுவதனுலோ எப்படித் தமிழராகி விடுவார்கள்?

தமிழ்நாட்டில் வாழும் பார்ப்பனர்கள், வரலாற்றுப்படி கருதப்படும் வகையில், தமிழ் நாட்டில் நுழைந்த ஆரியரே என்று கொண்டாலும், அன்றி ஆரியமதக் கொள்கைகளை யெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டு பிராமணர்களான தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களே என்று கொண்டாலும், அன்றி, ஆரியப் பிராமணரும் தமிழ்ப் பார்ப்பாரும் அக் காலத்திலேயே கலப்புற்றே இன்றைய பிராமணர் தோன்றி னர் என்று கொண்டாலும், பிராமணர்கள் ஒரு தனிப்பட்ட இனத்தைச் சேராத—திராவிட இரத்தக் கலப்புற்ற—ஆரிய ரென்றுகொண்டாலும், இன்றைய நிலையில் தமிழகத்தில் வாழும் பிராமணர்களே ஆரியத்தின் (கலை, மொழி, நாக ரிகங்களின்) பிரதிநிதிகளாகவும், பிராமணரல்லாத பிற மக்களே உண்மைத் தமிழர்களாகவும் (திராவிடத்தன்மை யுடையவர்களாகவும்) வாழ்வதையும், ஆரியப் பார்ப்பனர் தமிழ்ப் பண்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுப்பதுமட்டு மன்றி, இயன்ற வரையில் வடமொழியையும் ஆரிய நாக ரிகத்தையும், வர்ணாசிரம தருமத்தையும், பிராமண ஆதிக் கத்தை நிலைநாட்டும் மநுநீதியையும் புகுத்தி வந்திருப்ப தோடு அவைகளைப் பாதுகாக்க வழிதேடுவதும், அவர்க ளின் தொடர்பு ஏற்பட்ட அந்தக் காலத்திலிருந்தே, தமிழ்ப் பண்பாட்டைத் திரிக்கவும் கெடுக்கவும் முயன்று வருவதும், ஓரளவு வெற்றி பெற்றிருப்பதும் மறுக்கமுடியாத உண்மை களாகும். இவ்வுண்மைகளை மறந்து அவர்களும் தமிழ ரென்றல் — நஞ்சும் — பாலென்று கூறப்படுவதையன்றோ ஒக்கும்?

அப்படியானல் தமிழ்நாட்டில் வாழும், தெலுங்கு, கன்னடம், மலையாளம்போன்ற மொழிகளைத் தாய்மொழி யாகப் பெற்றவர்களும், ஆரியப் பார்ப்பனரைப் போலத்

தானே என்று கேட்கலாம். அவர்கள் ஆரியர்களைப்போலத் தமிழுக்கும் தமிழ்ப்பண்பாட்டுக்கும், மாறானவர்களோ அன்றி முற்றும் புறம்பானவர்களோ ஆகமாட்டார்கள். 'மனோன்மணீயம்' என்ற இலக்கியத்தை அளித்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் 'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன் உதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்' என்று பாடியிருக்கின்றபடி, தமிழினின்று தோன்றி வளர்ந்த தெலுங்கு முதலிய மொழிகளைப் பேசுபவர்கள் எப்படி ஆரியப் பார்ப்பனரைப்போல் முற்றும் முரண்பட்டவர்களாக முடியும்? ஆரியம் அவர்களுடைய நாட்டிலே நுழைந்து அங்கே வழங்கிய சிறிதே வேறுபட்ட பழந்தமிழைத் திரித்து, வடமொழிக் கலப்பு நிறைந்த புது மொழியாகச் சிதைத்த காரணத்தாலன்றோ தமிழ்மொழியினின்றும் கனித்து நிற்கும் வேற்று மொழியைப் பேசுபவர்களானார்கள்?

மற்றும்—தமிழல்லாத மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்களாயினும்—தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கரும் மலையாளியும், கன்னடியரும் — தமிழையும் தங்களுடைய தாய்மொழியை ஒப்பவே போற்றுவததையும்—சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் குடியேறியிருப்பினும் அவர்களுள்ளும் பலர், தமிழ் மொழியையே தமது தாய் மொழியாக உணர்ந்து கொண்டதையும், தமிழ் நாட்டையே தமது தாய்நாடாகக் கருதியுள்ளதையும் நாம் கண்டுவருகிறோம்.

மேலும், தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கரோ, கன்னடியரோ மலையாளியோ, பல துறைகளிலும் தமிழரைப் போலவே ஒப்புடையராய் வாழ்க்கை நடத்துகின்றனரேயன்றி, ஆரியர்களைப்போல் தமிழரை எத்துறையிலும் அடி

மைப்படுத்தி வாழவில்லை என்பதோடு அவர்களும் அதே ஆரியரிடத்தில் பல துறைகளிலும் அடிமைப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி, எங்கோ கிடந்துவந்த 'வடமொழி' கடவுள் மொழியானதைப்போல், மந்திர மொழியானதைப் போல் தெலுங்கோ மலையாளமோ ஆக்கப்படவில்லை. தமிழ் மொழி பயின்ற தெலுங்கரும், பிறரும் ஆரியர்கள். தமிழிலே வடமொழிச் சொற்களையும் — கருத்துக்களையும் நுழைத்து, மணிப்பிரவாளத்தை வளர்த்ததுபோல், தமது மொழியைப் புகுத்தவும் முயற்சிக்கவுமில்லை. அப்படியேதேனும் ஒன்றிரண்டு தெலுங்குச் சொல் அல்லது மலையாளச் சொல் தமிழிலே காணப்பட்டால் அவை வடமொழியிலும் காணப்படுவதாகவே இருக்கும் என்பது ஒருபுறமிருக்க, அதைப் புகுத்தியவர் யாரென்று ஆய்ந்தால், அவரும் தெலுங்கு நாட்டின் ஆரியராகவோ மலையாளப் பார்ப்பனராகவோதான் இருப்பார் என்பதும் அறியத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் — தெலுங்கிசை தவழ்கிறதே — காரணமென்ன? தெலுங்கரின் சூழ்ச்சியல்லவா? என்று சிலர் எண்ணக்கூடும். அதுவும் உண்மையல்ல. ஏனெனில், தமிழகத்தில் தெலுங்கிசையைப் புகுத்தியவர்களும், அதையே ஆதரித்து நிற்பவர்களும் ஆரியப் பார்ப்பனர்களே. தியாகப் பிரம்மமும், தீட்சிதரும், சாஸ்திரியும் தெலுங்குக் கீர்த்தனங்களே எழுதியதும், முத்துத்தாண்டவரும், கவிராயரும், வேதநாயகம் பிள்ளையும் தமிழ்ப்பாடல்களே இயற்றியதும், அரியக்குடியும் செம்மங்குடியும் தெலுங்கிசையையே போற்றி வளர்ப்பதும், தேசிகரும், பிள்ளையும் தமிழிசையைப் போற்றி வளர்ப்பதும் எதைக் காட்டுகின்றன?

தமிழ் இசையின் தனிச்சிறப்பை, கரகரவென ஒலிக்கும் வடமொழியில் வெல்லவோ, திரிக்கவோ வழியில்லை என்ப

தைக் கண்டுகொண்ட ஆரியம், ஆரியத்திடம் அடிமைப்பட்ட தெலுங்கு மொழியின் துணையைக்கொண்டு (அதன் ஓசையின் இனிமையைத் தங்களுக்குத் துணையாக்கி) தமிழ் நாட்டில் தமிழிசைக்கு இருந்த இயற்கையான இடத்தைக் கைப்பற்றினார்கள் என்று கூறுவதும் குற்றமாகாது. ஏனெனில் தெலுங்கிசை தமிழ் நாட்டில் பரவியது உண்மையென்றாலும்—உண்மைத் தெலுங்கர் எவரும் அதனால் வயிறு பிழைக்கவில்லை. அதனால் வாழ்வு பெற்றவர்கள் பிராமணர்களே. தமிழ் நாட்டில் அதற்கு முன்பெல்லாம் இசையரங்கு, தமிழர்களிடத்தில் இருந்த நிலை மாறி தெலுங்கிசைக்கும் ஆரியரிடத்தில் சென்றுவிட்டது.

எனவே, தமிழிடமிருந்து ஆரியக் கூட்டுறவால் பிரிந்து வளர்ந்த தெலுங்கைக் கருவியாகக்கொண்டு ஆரியம், தமிழுணர்ச்சி வளரவும், தன்னுணர்வு நிலைக்கவும் துணை செய்யும் தமிழிசையை வீழ்த்தித் தன் வாழ்வுக்கு வழி தேடிக் கொண்டதேயன்றி, ஆந்திரம் காரணமல்லவென்பதும் தெலுங்கர் இதனால் பயனடையவில்லை என்பதும் கண்கூடு.

மற்றும் திராவிட மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட எவராலும் தமிழர் வாழ்வு கெட்டதற்கு ஆதாரமில்லை. ஆனால், ஆரியர்கள் நுழைந்த காலத்திலிருந்து இன்றுவரைக்கும் தமிழருக்கு இழைத்த கொடுமைகளுக்கும் தமிழரைச் சுரண்டிய வகைகளுக்கும் ஆதாரங்கள் ஏராளம்.

இங்கிலையில் தமிழ் நாட்டில் தமிழருக்கடுத்தாற்போல் வாழும் உரிமையைப் பெற்றுள்ளவர்கள்—தமிழ் நாட்டின் பக்கத்து நாடுகளிலிருந்தே ஒரு காலத்தில் வந்தவரும், இன்று தமிழ் நாட்டையே தமது தாய் நாடாக ஏற்றுக் கொள்பவரும் தமிழரோடு ஒத்த நிலையில் வாழ்க்கை நடத்து

பவருமான தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் ஆவார்கள். வாழ்வதற்கும் உரிமை பெறவேண்டியவர்கள் ஆரியப் பார்ப்பனர்களே ஆவார்கள்.

ஆனால் ஆரியர்கள் தெலுங்கர் முதலியோர் குடியேறு முன்பே, நீண்ட பல நூற்றாண்டுகளுக்குமுன்பே தமிழ் நாட்டில் குடியேறியவர்களாயிற்றே—அவர்களுக்கா வாழும் உரிமைகூட இன்று இல்லை? இனி யளிக்கப்படவேண்டுமா? என்றும் கேட்கலாம். இயற்கையாகப் பெற்றிருக்கவேண்டிய உரிமையை இதுவரை பெறாததால் இனி அளிக்கப்பட வேண்டியவர்களாவார்கள். எப்படியெனில், இவ்வளவு நூற்றாண்டுகள் கழித்தும், தமிழ்நாட்டைத் தங்களுடைய தாய் நாடென்றும், தமிழ் மொழியைத் தமது தாய் மொழியென்றும், தமிழ்ப் பண்பாடே சிறந்ததென்றும் ஏற்றுக்கொள்ள மறுப்பதே, அவர்களுக்கு இதுவரை வாழும் உரிமை ஏற்படவில்லை யென்று நாம் கூறுவதன்காரணம். சில நூற்றாண்டுகளுக்கு முன்பே வந்த தெலுங்கராலும் பிறவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இவற்றை 'ஆரியம்' ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் என்ன பொருள்? தமிழ்நாடும், மொழியும் தாழ்ந்தது, ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுதானே பொருள். அப்படியானால் 'தாழ்ந்த இடத்தில் இருக்க வேண்டாம்' "உயர்ந்த இடத்தையே நாடு" என்று விடையளித்தாகவேண்டும். அப்பொழுது 'வாழ உரிமை இல்லை' என்பது வற்புறுத்தப்படும்.

ஆனாலும் யூதர்களைப்போலவே, தங்களுக்கென ஒரு தாய் நாடு அற்றவர்களாயிற்றே என்பதனாலும், எங்கே செல்வது என்ற காரணத்தாலும், "மநுநீதியின்" பெயரால் அட்டூழியங்கள் செய்த அதே இனத்திற்கு தமிழர் தமது பெருந்தன்மையால் "மனித நீதியின்" பெயரால் மனிதனாக

வாழும் உரிமையை அவர்களுக்கும் அளிப்பார்கள். வாழும் உரிமையை வழங்குவார்கள் என்பதும் உறுதி. ஆனல் இன்றுள்ள தலைகீழ் நிலையோ, அவர்களன்றே நமக்கு உரிமை யளிக்கின்றனர். அவர்களோ 'பூதேவர்', நாமோ 'சூத்திரர்', நமக்கோ அவர்கள் 'புண்ணியசீலர்கள்' 'புருடோத்தமர்கள்', 'எஜமானர்கள்! இந்தக் கேவல நிலையும், மானமிழந்த வாழ்வும் மாறவேண்டாமா? இந்நிலை மாறி ஊராளும் உரிமையும், உரிமையளிக்கும் பெருமையும் உண்மைத் தமிழருக்கே உரியதாக வேண்டாமா?

மற்றும், இங்கேயே நீண்ட நாள் தங்கிவிட்ட காரணத்தாலேயே எப்படியும் வாழும் உரிமை அளித்தேயாகவேண்டுமென்று யாரும் கூறமுடியாது. திருடன், ஒருவன் ஒரு வீட்டில் நுழைந்து எக்காரணத்தாலோ அங்கே ஒரு பகல் முழுதும் தங்க நேரிட்டுவிட்டதாலேயே, அந்த வீட்டிலே வாழும் உரிமை பெற்றவனுகி விடமாட்டான். அதுமட்டுமன்றி, திருடன் என்ற குற்றச்சாட்டினின்றுங்கூட தப்ப முடியாது. அதைப்போல் ஆரியரால் ஏற்பட்ட விளைவை எண்ணினுல் வாழ உரிமையளிப்பதுங்கூட பிழையே. ஆனல் தமிழரின் பெருந்தன்மையாலும், பகுத்தறிவின் வளர்ச்சியாலும், அவர்களையும் மனிதராகவே வாழச்செய்யலாம் என்ற நம்பிக்கையாலுமே அந்த உரிமை யளிக்கப்படும் (வாழும் உரிமை யளிக்கப்படாது) என்று உறுதியாகக் கூறுகிறேம். அதை அளிக்கும் உரிமை தமிழருக்கே உண்டு.

எனவேதான், பெரியார் இராமசாமி, தமிழ்நாடு தமிழருக்கே என்பதற்கு, தமிழ்நாட்டு ஆட்சி பார்ப்பனரல்லாதாராகிய தமிழருக்கே என்றும்: தமிழ் நாட்டு உரிமை திராவிட இனத்தவருக்கே என்றும் விளக்கம் கூறினர். பார்ப்பனர்கள் தமிழரல்லர் என்பதும் பல ஆதாரங்களுடன் எடுத்துக்

காட்டப்பட்டது. அதன் விளைவாகவே 'தமிழ் நாடு தமிழருக்கே'' என்ற முழக்கத்தில் 'தமிழருக்கே' என்பது அழுந்தக் கூறப்பட்டது. தமிழருக்கே என்பதை அழுந்தக்கூறியதைக் கேட்ட ஆரியப் பார்ப்பனர், தமிழரல்லாதார் அதை வகுப்பு வாதம் என்று தூற்றினர், சஞ்சலத்தோடு எதிர்க்கத்தொடங்கினர். இன்றைய முழக்கத்திலோ 'தமிழ்நாடு' என்பதிலே உள்ள அழுத்தம் 'தமிழருக்கே' என்பதிலே இல்லையென்பதைக் கண்டவுடன் ஆரியம் ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டது. நாடு பிரிவதனாலோ, விரிவதனாலோ ஆரிய ஆதிக்கம் பாதிக்கப்படாது என்ற உண்மையைப் பலப்பல நூற்றாண்டுகளாகவே உணர்ந்து, நிலைமைக்கேற்ப நடந்து வந்துள்ள ஆரியர், இந்த ஒலி மிகுந்தவுடன், இதிலே ஆபத்து இருக்காது என்பதைக் கண்டு கொண்டு ஆதரிப்பதிலே ஆச்சரியத்துக்கே இடமில்லை.

தமிழ் நிலம் முழுவதும் தமிழ்நாடே என்பதை நாம் கூறுதநேரமே கிடையாது. ஆனால் ஊராளும் உரிமை உண்மைத் தமிழருக்கே ஏற்படும்படியான மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பது தான் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று பெரியார் இராமசாமி தொடங்கியதன் முக்கிய நோக்கம்.

அந் நோக்கத்தைச் சிதைக்க, "தமிழ் பேசுவோரெல்லாம் தமிழரே" என்றும், "தமிழருக்கு என்றால் தெலுங்கர் எங்கேபோவது?" என்றும், "மலையாளி புறப்படவேண்டியது தானா?" என்றும் பலப்பல முக்கியமற்ற (பிரச்னைகளை) செய்திகளைச் சிலர் கிளப்பியதாலேயே, அந்தக் கேள்விகள் பொருளற்ற கேள்விகள் என்பதை எடுத்துக் காட்டியதோடு; தமிழ்நாட்டில் உண்மைத் தமிழரே ஆளவேண்டும் என்ற அதே கருத்தை, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று

கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 'திராவிடர்' என்று தமிழர்கள் தங்களை உணர்ந்து கொண்டால், அப்பொழுதே ஆரியப் பார்ப்பனர் வேறு என்ற உணர்ச்சியும், தெலுங்கரும் கன்னடரும் மலையாளிகளையும் தம்மைப்போன்றே 'திராவிடர்' என்ற எண்ணமும், ஏற்பட்டு நாளடைவில் வளர்ந்து கருதிய பயனை அளிக்கும் என்பதோடு, ஆரியர், "தமிழர்" என்ற போர்வையில் ஆதிக்கம் செலுத்த முற்படுவதைத் தடுக்கவும், தெலுங்கரும், பிறரும் வேற்றூர் என்ற எண்ணம் மறையவும் "வெளியேறுவதா?" என்ற வீண் கேள்வியை வீழ்த்தவுமே, 'திராவிடர்' என்று கூறுவது தமிழர் நலனைக் கருதியே அவசியமாயிற்று. 'திராவிடரே' உண்மைத் தமிழர் என்ற வரலாற்றிலே உள்ள ஆதாரத்தினாலேயே ஆரிய ஆதிக்கத்தை வீழ்த்த, 'திராவிடர்' என்ற இனப் பெயரைப் பயன்படுத்திவரச் செய்தது. 'திராவிடர்கள்' என்ற பெயர் தமிழரை மட்டுமன்றி, உண்மைத் தெலுங்கரையும், மலையாளிகளையும், கன்னடியரையும், சென்னை மாகாணத்தில் வாழும் ஆரியரல்லாத மற்றமக்கள் அனைவரையுமே குறிப்பிட்டதினாலேயே, 'திராவிடர்கள்' அனைவருடைய விடுதலையைக் கருதி, பெரியார் இராமசாமி அவர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதற்குச் "சென்னை மாகாணம் திராவிடர் ஆட்சியில் அமைய வேண்டும்" என்று விளக்கந்தந்தார்கள். ஆந்திர தேசத்தவரும், கேரளரும் கூட ஆரிய அடிமைகளாகவே இருப்பதனால், அவர்களும் ஆரியத்தின் பிடியிலிருந்து விலக 'திராவிட இன எழுச்சி' பயன் படும் என்பதும் அதற்குத்துணைக் காரணமாயிற்று.

மற்றும் வடநாட்டார் ஆதிக்கத்தால், சென்னைமாகாணம் முழுவதும் சுரண்டப்படுவதைக்கண்டு அதனினின்று விடுவிக்க, சென்னை மாகாணம், வட இந்தியா தொடர்பற்ற

டில்லியினின்றும் விலகிய ஒருதனி நாடாக அமைய வேண்டும் என்ற முடிவுக்கும் வந்ததாலேயே 'திராவிட நாடு' அப்படியே வற்புறுத்தப்படலாயிற்று. மேலும், வெள்ளையர் ஆட்சியில் உள்ள இந்தியப் பகுதியில், சென்னை மாகாணம், ஏற்கனவே ஒரு தனி நிர்வாகமாக (மாகாண ஆட்சியாக) இருப்பதால்—அதைப் பிரிப்பது—டில்லி ஆதிக்கத்தினின்று விடுவிப்பது, எளிதாக இயலும், விடுதலை விரைவில் கிடைக்கும் என்ற எண்ணத்தாலும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றே கூறப்பட்டுள்ளது.

அந்த முறையில் அமையும் திராவிட நாடு ஒரு குடியரசு நாடுகளின் இணைப்பாக, 'ஐக்கியத் திராவிடக் குடியரசு நாடு' என்ற பெயரால் விளங்கும் என்பதும் கூறப்பட்டுள்ளது. அந்த இணைப்பிலே ஒரு பகுதியான தமிழ்நாடு முழு உரிமையோடு விளங்க முடியும் என்பது மட்டுமன்றி உண்மைத் தமிழரே ஆளக்கூடிய சூழ்நிலையும்—திராவிட இன உணர்ச்சி மூலம்—வளர்க்கப்பட முடியும்.

அத்தகைய திராவிட நாட்டுக் கொள்கையைத் தெலுங்கர் ஒத்துக்கொள்ள வில்லையே என்றாலோ, மலையாளி மறுப்பரே என்றாலோ—தமிழருக்கல்ல இழப்பு. தமிழர்—தம்மைத் திராவிடர் என்று உணர்ந்து விட்டால் தமிழருக்குக் கிடைக்கும் தமிழகம்—தமிழ்நாடு—திராவிடமாக விளங்க முடியும்.

சென்னை மாகாண நிலப்பரப்பு முழுவதும் ஒரு ஐக்கியத் திராவிடக் குடியரசு நாடுகளின் இணைப்பாக அமையாவிட்டாலும் 'தமிழ்நாடு' ஒன்றில் மட்டுமாவது உண்மைத் தமிழன்—திராவிடன் ஆட்சி நிலவியே தீரும். திராவிட நாகரீகமும் பண்பும்—உண்மைத் தமிழனின் சமத்துவக்

கொள்கைகள் யாவும் விளங்கியே தீரும். 'திராவிட நாடு' அமையவில்லையெனினும், 'தமிழ் நாடு' திராவிடமாக அமைந்தால்தான் தமிழர் ஆட்சி நிலைக்கும் என்பதைத் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.

இன்று தமிழர்க்கும் ஆந்திரர்க்கும் வளர்ந்துள்ள தகராறு எல்லைத் தகராறு மொழித்தகராறு. திராவிடத் தமிழருக்கும், ஆரியப் பார்ப்பனருக்கும் வளர்ந்துள்ள தகராறு வீட்டுத் தகராறு. வீட்டுத் தகராறு என்றால்—குடும்பத் தகராறு என்பதல்ல பொருள். ஆரியன் தமிழன் வீட்டினுள்ளே வந்து உட்கார்ந்துகொண்டதுமன்னியில் அவனையே எடுபிடியைப்போல் இழிவுபடுத்தி வேலையும் வாங்கிக் கொண்டுள்ளான். தமிழன் ஆரியனிடம் தலை வணங்க, கை கட்டி, வாய் பொத்தி நிற்கிறான். ஆரியனின் தந்திர முறையால், தமிழனை உயர்ந்த இடத்தில் உட்காரவைத்தும், தனது வேலைகளைச் செய்யச்சொல்லிப் பயன் பெறுவது எளிதாகிவிட்டது. எனவே, இந்நிலை மாறவேண்டுமானால், தமிழர்கள் தாங்கள் ஒரு தனி இனம் என்பதை உணர்ந்தாகவேண்டும் என்று கூறுகிறோம்.

தமிழ் நாட்டின், எல்லையிலே ஒரு பகுதியையும் அந்நியரிடத்தில் இழக்கச் சம்மதிக்காத நாம், நமது சொந்த இல்லத்திலேயே, அந்நிய ஆரியரின் ஆதிக்கத்திற்கு இடந்தருவது இழுக்கன்றோ? நாட்டிலே அந்நியர் ஆட்சி கூடாது என்று கூறிவிட்ட நாம் வீட்டிலே அந்நியர் ஆட்சியை விட்டு வைத்திடலாமா? எனவேதான் 'திராவிட இன வுணர்ச்சி' தமிழ் நாட்டிலேயே வாழப்போகும் தமிழர்க்கும் தேவைப்படுகிறது.

• தமிழ் நாட்டோடு மற்ற திராவிட நாடுகள் இணைய மறுத்தாலும் கவலையில்லை. ஆனால் தமிழ் நாடு எக்காரணத்

தாலும், 'டில்லி' ஆட்சியின் கீழே இருக்க ஒப்புக்கொள்ளக் கூடாது. ஆந்திரர் தமிழ் நாட்டிலே செலுத்தும் ஆதிக்கம், தமிழ் நாட்டிலும், பொதுவாகத் திராவிட நாடு முழுவதி லும், வடநாட்டார் செலுத்தும் பொருளாதார ஆதிக்கத் தோடு ஒப்பிட்டுப் பார்க்கவே தகுதியில்லாதது.

ஆந்திரர் ஆதிக்கம் இருப்பதாக எண்ணிக்கொண்டு 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறத் தொடங்கியுள்ள சிலரும், வடநாட்டு ஆதிக்கத்தை எண்ணிப் பார்த்தாக வேண்டும். எண்ணிப்பார்த்தால் ஆந்திரர்—தமிழர் பிரச்னை எல்லைப் பிரச்னை மட்டுமே என்பது விளங்காமற் போகாது. வடநாட்டார் தென்னாட்டார் பிரச்னை—தென்னாடு சுரண்டப் படுவதினின்றும் தப்பும் பிரச்னை, என்பதோடு அதுவே தமிழ் நாடு ஏழ்மையினின்றும் மீளும் மார்க்கம் என்பதையும் அறியலாம். இதைக் கருதியே தமிழ் நாடு—டில்லி தொடர் பை அறுத்துக்கொள்ளச் சாதகமாகவே—இனத்தின் பெய ரால் ஒரு இடமும், தென்னாட்டின்பரப்பு ஏறத்தாழ பொருந் தும்படியாகவும், 'திராவிட நாடு' பிரியவேண்டும் என்று பெரியார் இராமசாமியால் கேட்கப்படுகிறது. தமிழ்நாடு மட்டும் பிரிந்தாலும் அந்த உண்மையை மறந்துவிடாமல், ஆரிய வட நாட்டு ஆதிக்கத்தினின்றும் 'தமிழ்நாடு' தனி நாடாகவேண்டும்.

மற்றும்—சுய நிர்ணய உரிமையின் பேரால் தமிழ் நாடு ஒரு மாகாணமாக—டில்லி தொடர்போடு அமைய—தமி ழர்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது. ஒரு மாகாண உரிமை யோடு ஒரு நாடு அமைக்கப்படுவது அந்த நாட்டுக்கே இழிவு. எனவே, தமிழ்நாடு தனக்குரிய ஒரு நாட்டுக்குரிய எல்லா உரிமைகளையும் பெற்றே திகழவேண்டும்.

அப்பொழுது தமிழ் நாடு ஒரு தனி நாடாக மட்டு மன்றி, உண்மைத் தமிழர் ஆட்சியிலே விளங்கமுடியும். அதற்காகத்தான் 'திராவிட இன உணர்ச்சி' தேவையென்று கருதுகிறோம். தமிழ்நாட்டை ஆரிய ஆதிக்கத்தினின்று மீட்க, வடநாட்டினின்றும் விடுவிக்க, 'திராவிட நாடு' என்று அழைத்தால் தவறென்ன ?

தமிழ் நாடு—ஒரு சிறந்த நாடாகத் திகழ எல்லை வகுப்பது ஒரு புறம் நடக்க, இன உணர்ச்சியும் வளர்க்கப் பட்டாகவேண்டும். எனவேதான், திராவிடர்-திராவிட நாடு என்ற முழக்கம் ஒலித்த வண்ணமுள்ளது என்று தமிழகம் காணப்பட்டாலும், அது திராவிடமாகத்தான் அமைய வேண்டும். அப்பொழுது தான் நிலைத்து விளங்கமுடியும். திராவிட நாடு பரப்பிலே குறைந்து தமிழ் நாட்டு அளவிலே நின்றாலும் பண்பிலே குறையக்கூடாது என்ற எண்ணத்தா லேயே தமிழ் நாடு தமிழருக்கு என்ற அடிப்படையிலேயே 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றும், "வாழ்க திரா விடம்" எனவும் வாழ்த்துகிறோம். தவறா ? எண்ணிப் பாருங்கள் !

ஜன்னலுக்கப்பால்...!

தி. கோ. சீனுவாசன்

"அதோ அந்த ஜன்னலைப் பாருங்கள் ! கம்பிகளுக் கிடையே காணப்படும் அவன் முகம் கவலை நிறைந்திருப் பானேன் ? அவள் வாழ்வில் ஒளி மறைந்து விட்டதே. பலர் அவளைப் பார்த்துக்கொண்டே போகிறீர்களே, யாரா

வது அவள் வாழ்விலே படிந்த தூசியை துணிந்து தட்டி-விட எண்ணினீர்களா?" இதைத்தான் அவன் அவள் வீட்டுப் பக்கம் போகும் போதும் வரும் போதும் உலகத்தைப் பார்த்து கேட்க நினைத்தான். வாயைத் திறந்து கேட்கவில்லை. அவளைப் பரிவாகப் பார்ப்பதும், உலகை ஆத்திரமாக நோக்குவதும் அவன் எண்ணத்தை வெளிப்படுத்தின.

அவள் யார் தெரியுமா? எதிர்வீட்டு ஜன்னலருகே நின்று இரக்கமற்ற இந்த உலகைப் பார்த்துக் கொண்டிருந்தாளே அவளேதான்! பருவத்திலே பாழாக்கப்பட்ட பாவை. மலரும் வேளையிலே சருக்கான மலர். அவள் கண்களிலே கவர்ச்சி மறையவில்லை. அதரங்களில் இன்பத்தின் துடிப்பு இருந்துகொண்டு தானிருந்தது. ஆனால், உலகம் அவளை இன்ப எல்லையிலிருந்து நீக்கிவிட்டது. மஞ்சளும் குங்குமமும் மட்டும் அவள் முகத்திலிருந்திருந்தால் சுமங்கிலி பூஜைக்கு அவளுக்குத்தான் முதல் தாம்பூலம் வைத்து அழைத்திருப்பார்கள்.

அவன் அவளைப் பார்த்தான். பார்வையில் இரக்கந்தானிருந்தது. இரக்கம் வேறொரு உருவமடைந்தது. வேறொன்றுமில்லை, சாதாரண அன்புதான். எப்போதும் சாதாரண அன்புதானே காதலாக மாறும், அதுபோலத்தான் நடந்தது. அவன் கவியாக இருந்திருந்தால் "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை ஒத்திருந்த அவள்முகத்தை" பற்றி ஒரு காவியம் புனைந்திருப்பான். சித்திரக்காரனயிருந்திருந்தால் அள்ளி விழுங்கும் அவள் விழிகளையும் அருகே வரவேற்கும் அதரங்களையும் ஓவியமாகத் தீட்டி இருப்பான். சிற்பியாக இருந்திருந்தால் அங்க லட்சணங்கள் அத்தனையும் அமைந்த அந்த பேசும் சிலையை பேசாச்

சிலையாக ஆக்கியிருப்பான். மூவரில் ஒருவனாகவும் இல்லாத காரணத்தால் அவளைப் பார்த்து பார்த்து மகிழ்ந்து மகிழ்ச்சியினால் நெகிழ்ந்து நெகிழ்ச்சியினால் தூண்டப்பட்டு அவளைப் பார்ப்பதையே தினமும் முதல் வேலையாக ஆக்கிக் கொண்டான்.

அவளுக்கு என்ன இவன்மேல் திடீர்க்காதலா? தன் தலையில் அன்று அழிக்கமுடியாமல் எழுதப்பட்ட எழுத்தை எண்ணி எதிரிலிருக்கும் ஏகாம்பரநாதனை துதித்துக்கொண்டிருந்தாள். ரயில் வண்டியில் போகும் போது ஒரு வண்டியில் இடமில்லாவிட்டால் அடுத்த வண்டியிலாவது இருக்கிறதா என்று தேடுவோமே அந்த மாதிரி இந்த ஜன்மத்தில் கிடைக்காத இன்பம் அடுத்த ஜன்மத்திலாவது கிடைக்காதா என ஆண்டவனுக்கு மனுசெய்துக் கொண்டிருந்தாள். கேட்பாரற்றுக் கிடந்த அந்தக் கோவிலுக்கு திடீரென்று கிராக்கி ஏற்பட்டது. ஆறுகால பூஜை நடக்காவிட்டாலும், தனியாகவே இருந்து பைத்தியம் பிடிக்கும் நிலை ஏற்பட்ட பிறகாவது எல்லோரும் அங்கேகூட ஆரம்பித்தார்கள். எனக்கு மட்டும் உயர்ந்த பண்பு என்கிறார்களே அது இருந்திருந்தால் எதிர்வீட்டு எழில்வல்லியின் பலமான பக்திதான் அந்த கோவிலுக்கு அத்தனை மகிமையைக் கொடுத்தது என எழுதியிருப்பேன். ஆனால் சாதாரண அறிவு படைத்த எனக்கு அழகி ஒருத்தி கண்முன்னே காட்சி அளிக்கிறாள் என்றால் இதைப் பார்ப்பதைத் தவிர ஊர்க்காளைகளுக்கு வேறென்ன வேலை, எனக்கேட்கத்தான் தோன்றுகிறது.

தன்னை ஈடேற்றி வைத்த அந்த அவளுக்கு ஏகாம்பரநாதர் ஏதாவது செய்தால்தானே "உய்வில்லை செய்நன்றி

கொன்ற மகட்கு" என்பதைப் படித்திருக்கிறூர் என்று அர்த்தமாகும். அவன் அவளைப் பார்த்தான். அவள் ஏகாம்பரநாதனைப் பார்த்தாள். ஏகாம்பரநாதன் மன்மதனை பார்த்தார். மன்மதன் தன் பாணத்தைப் பார்த்தான். பாணம் இருவர் உள்ளங்களையும் ஊடுறுவிப் பார்த்தது. பாணம் பாய்ந்தவுடன் இருவர் கண்களும் ஒன்றுக்குள் ஒன்று பார்த்தன. காதல் தெய்வத்தின் ஸ்தல புராணமா இது எனக் கேட்கிறீர்கள்; தமிழ்ப் பண்டிதர்கள் நடையில் எழுதினுல் எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு சாம்பிள்"!

எது எப்படி யிருந்தாலும் அவன் அவளைப்பார்த்தான். விதவையாயிற்றே என வெறுக்கவோ அல்லது ஜன்னலருகே நிற்கிறுளே என நினைத்து தன் "ஆண்மை"யை அவளுக்கு எடுத்துக் காட்டி மன்மத பாணத்திற்கு அச்சாரங்கொடுக்க வோ இல்லை. சலவைத் தொழிலாளிக்கும் பவுடர் கடைக்கும் பணஞ் செலவழிக்கவில்லை. பாலை வனத்தை சோலை வனம் நிறைந்ததாக்க முடியுமா என கவலைப்படவுமில்லை இதெல்லாம் செய்யும் அளவுக்கு அவன் அறிவைப் பறி கொடுக்கவுமில்லை, கோழையாகவுமில்லை. "சட்டையில் கிழிச்சலிருந்தால் ஒட்டுப்போடுகிறோம். அதே மாதிரி விட் டுப்போன அவள் வாழ்வை ஒட்டுப்போடுவோம். அதற்கு ஈடாக அவள் இதயம் நிறைந்த அன்பை நமக்களிப்பாள்" என்ற எண்ணந்தான் பலர் அவளைப் பார்த்தும் இவன் பார்வையை மட்டும் அவளுக்கு தணித்துக் காட்டியது. காதல் வளர்ந்தது. முதலில் கண்கள் பேசின. பின்னர் கடிதங்கள் பேசின. காதல் வளர்ச்சியின் கடைசிக் கட்ட மாகிய உதடுகள் பேசுவதற்கு தடையாக அந்த ஜன்னல் கம்பிகள் இருந்தன!

இவர்கள் இருவரும் தமக்கிடையே இருக்கும் தூரத்தைக் குறைத்துக்கொள்வது ஏகாம்பரநாதருக்கு ஏற்பட்ட திடீர் பக்தர்களுக்கு பிடிக்கவில்லை, தாம் அந்த ஆண்டவனுக்கு அத்தனை கஷ்டப்பட்டு ஆராதனை செய்வது. ஆனால் இந்த சாமியும் வரந்தரவில்லை, இந்த அம்மனும் சரி சொல்லவில்லை என்றால் ஏன் அவர்களுக்கு கோபம் வராது? கூடிக் கூடிப் பேசினர். பேசினதோடு விட்டு விடவில்லை. வீதியெல்லாம் தூற்றினர். விதவையின் வழிகளில் ஒளி தோன்றலாமா, என வாதிட்டனர். தாலி யறுத்தவள் தகாதன செய்ய நினைக்கலாமா என தத்துவம் பேசினர். மஞ்சளோடு மங்களமும் மறையவேண்டாமா என மதவாதம் பேசினர். அவர்களுக்குத் தெரியாது. மலரும் பூவின் மணத்தைத் தடுக்க எந்த வேலியும் கிடையாது என்பது!

எங்கள் வீடும் அவள் வீட்டுக்கு எதிர்பக்கந்தான். பக்கத்து வீட்டிலே உள்ள கிழவர் அன்று என் தம்பியோடு பேசிக்கொண்டிருந்தார்.

"தம்பி அந்த எதிர்த்த வீட்டு முண்டை இருக்கிறாளே........"

"என்ன தாத்தா வயசானவங்க வாயிலே வந்தபடி பேசலாமா"

"இல்லை தம்பி அவன் அவகிட்ட கடுதாசி குடுத்தான் எங்கண்ணாலே பார்த்தேன்"

"வெளிலே பறந்து வந்திருக்கும், எடுத்துக் கொடுத்திருப்பான்"

"இதெல்லாம் ஒனக்குத் தெரியாது தம்பி, நீ சின்ன பிள்ளை, எனக்கு இதிலே எல்லாம் ரொம்ப பழக்கம். நம்ப தெருவிலே இப்படி நடக்கலாமா?"

பிறகு என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது அந்தகிழவருக்கு இப்போது இருப்பவள் மூன்றாவ

துதாரம். வீட்டிலே சுமங்கலி யாருமில்லாவிட்டால் லட்சுமி போய் விடுவாளாம்! இதைச் சொல்லியே அவரும் ஒன்றன் பின் ஒன்ருக மூன்று பெண்களை அக்கினி எரிய, அந்தணர் வேதமோத முப்பத்து முக்கோடி தேவர்களையும் சாட்சியாக வைத்துக் கல்யாணஞ் செய்துகொண்டார். லட்சுமிக்கு பிணக்கு ஏற்படும்போதெல்லாம் சுமங்கலிகளை பலி வாங்கினுளே தவிர, இவரிடம் நெருங்குவதற்குமட்டும் பயந்தான் போலிருக்கிறது. ஆனல் எனக்கு மட்டும் ஒரு சந்தேகம். இவர் இறந்தபிறகு இப்போதிருக்கும் அவருடைய அந்த "வஸ்து" மறுபடியும் தன்னை சுமங்கிலியாக்கிக்கொண்டால்தானே லட்சுமியும் வாடகைப் பத்திரத்தை ரத்து செய்யமாட்டாள்?"

மறுநாள் அவன் வந்தான். அவள் வீட்டுப் பக்கம் வரும்போது யாரோ "டேய்" என அழைத்தார்கள். திரும்பிப் பார்த்தான். ஒரு கிழவன் ஒரு தடியுடன் ஓடி வந்துகொண்டிருந்தான். இவனும் பக்கத்திலிருந்த ஒரு குச்சியை எடுத்துக்கொண்டான். கிழவன் ஓங்கி ஒரு அடி அடித்தான். இவன் தடி அவன் மண்டையைப் பிளந்தது, "ஐயோ, அப்பா என்ற ஓலமுந் தொடர்ந்துவந்தது. அவள் அடிப்பட்ட அவள் தகப்பனைச் சுற்றி அழுதுகொண்டிருந்தாள். ஏகாம்பரநாதர் மட்டும் மூடிய கண்களை திறக்கவே இல்லை!

தூக்கு மேடை அருகே கறுப்புத்துணி போர்த்து நிற்கும் அவள்மேல் வைத்த பார்வையை சற்றுத் திருப்பி அந்த கம்பிகளுக்கப்பாலிருக்கும் திரை விழுகிறதே, ஏன் தெரியுமா? எவனே வீட்டிலே இன்பங் காணுதவன் இவளைத் தேடிவந்திருக்கிறுன். அவன் உடலும் உள்ளமும் அனுதையான அவள் வாழ்வை நடத்த உபயோகப்படுகின்றன. கதாசிரியர்கள் உரிமைகள் பதிவு செய்யப்பட்டவை என எழுதுகிறுர்களே அது முன்பு. இப்போது அவள் உரிமைகள் பதிவு செய்யப்படாதவள். ஏகாம்பரநாதருக்கு அந்த ஜன்னலுக்கப்பாலுள்ள திரைதான் தெரிகிறது!

“வளர்க நின்புகழ்”

ச. நெடுமாறன்

வாழ்க திராவிடம்!
வளர்க நின்புகழ்!!

வாழ்க திராவிடம் ஆம்! வாழ்வதும் இயற்கைதான். ஏன்? வஞ்சகர் வரவால் வாட்டம் அடைந்து வண்டமிழ் மரபு, வான்புகழ் எய்தி வளமுற வாழவும், அன்று நற்றமிழர் அடைந்த வெற்றியும், இன்று அத்தமிழர் அடைந்த வீழ்ச்சியும் எடுத்துக் காட்டவும் புலிக்கொடி ஏந்திபுன்னகை கொண்டு போரிலே வெற்றியைக் கண்ட காவலர்கள் ஆண்டநாட்டில் பிறந்த நற்றமிழ் மக்கள், பூர்ணயயாவின் புத்ரர்கள் வரவால், அன்று கண்ட புன்னகை, இன்று அலைகடலில் அகப்பட்டு செந்தனல் தீயில் சிக்கி திக்குத் தெரியாமல் அலைமோதும் மரக்கலம் போன்றும் உயிரிருந்தும் உரிமை இல்லாது வாழும் செந்தமிழ் தோழனை தட்டியெழுப்ப,

வாழ்க திராவிடம்!
வாழ்க நின்புகழ்!

கிழக்கிந்திய கம்பெனியின் சொந்தக்காரர்களான வெள்ளை ஆரிய ஏகாதிபத்ய எத்தர்கள் ஆட்சியால், உழைத்தும் உணவு இல்லாது கோலார் சுரங்கங்கள் இருந்தும்தங்கத்தையறியாது, மூன்று பக்கம் முத்துகள் விளையும் கடல்கள் இருந்துப், முத்தை கண்டறியாத கண்மூடியாகவும், மலைகள் சோலைகள் பல பல இருந்தும் ஓய்வுக்கு உலவ நேரமில்லாத பஞ்சைகளாகவும் கலாசாலைகள் கணக்கற்றவைகள் இருந்தும் கையெழுத்திற்கு கைவிரலை காட்டும் பாமரர் வாழும் கோரநிலையை படம் பிடித்து காட்ட;

வாழ்க திராவிடம்!
வளர்க நின்புகழ்!

மதத்திலே மாற்றம், வாணிபத்திலே வளம், அரசியலிலே ஆண்மை, கொடுமைக்கு மருந்து மடமைக்கு மருத்துவம் இளமைக்கு விருந்து, சீர்திருத்தத்திற்கு சிகரம் தந்து முடங்கிக் கிடக்கும் திராவிடத்தை நிமிரச் செய்து வாட்டத்தை ஒழித்து, வளப்பத்தைக் கொடுத்து இனியாவது இன்ப திராவிடத்தைக் காண வரவேற்கின்றேன். உண்மை உவப்போடு.

வாழ்க திராவிடம்!
வளர்க நின்புகழ்!

பெரியார் ஈ. வே. ரா. வாழ்க!

அருந்தமிழ் தொண்டன்.

விதியை வீழ்த்தி, வீணரை விரட்டி அடிமை வாழ்வை அறுத்தெறிந்து மக்களை மக்களாக வாழுமாறு இடைவிடாமல் உழைத்து வரும் தலைவர் பெரியார். திராவிடத்தின் சமுதாயம், அரசியல், அறிவியல், பொருளியல், வாழ்க்கை இயல் ஆகிய துறைகளிலே வறட்சி அடைந்து மிரட்டிக் கொண்டிருந்த நம்மை உணர்ச்சி உண்டாக்கி கிளர்ச்சி செய்யச் செய்த புரட்சிவீரர் ஈ. வே. ரா. திராவிடத்திலே 20-நூற்றாண்டுகளாகப் பற்றி பிடித்துள்ள பல கொடிய பிணிகளையும் ஆரியம் பயிராக்கி வைத்திருக்கும் பல விஷ விருட்சங்களையும் வேருடன் வெட்டி வீழ்த்த விரும்பும் வெண்தாடி வேந்தர். உலகின் மக்கள் யாவரையும் பிடித்திருக்கும் ஒரு பெரிய வியாதி (ரஷ்யரைத் தவிர) கடவுள்,

மதம், கடவுள் நோயைவிட மதநோய் கொடிதென உரைத்த மேலோர் பெரியார். ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டுமென்றும், தேசம், தேசியம் நமது கூற்றன்று என்றும், மக்களுக்குள் சுயமரியாதையும், சமத்துவம், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டுமென்றும், உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாகி விடுகின்றது என்றும் அவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயரும் என்றென்றும் உண்மை அறிவு வளர வேண்டுமென்னும் உயரிய கருத்துக்களை தந்த அறிவு சான்ற பெரியார் ஈ. வெ. ரா.

வீணர்களும் பிறரைச் சுரண்டி பிழைப்பவரும் அகங்காரம், ஆணவம் தாண்டவம் ஆடி, வேலையில்லா திண்டாட்டம், வறுமை, பசி, பெருகியதால் தோழர் லெனினின் சமதர்மம் தோன்றவேண்டியதாயிற்று. ரஷ்யாவில் அதுபோலவே அறியாமையை வளர்த்து மதமூட பழக்கவழக்கங்களை பெருக்கி சாதி சமய வேறுபாடுகளைப் புகுத்தி, சாதிக் கொருநீதி வகுத்து, பிராமண ஆதிக்கம் நடத்திவரும் ஆரியத்தால் தான் இங்கே கடமை வீரர் பெரியார் ஈ. வெ. ரா. வால் சுயமரியாதை இயக்கம் தோன்றவேண்டியது இன்றியமையாததாகி விட்டது.

பூதேவர்களின் வஞ்சக சதிகளையும், இழிச்செயல்களையும், பதவி வெறியையும அந்தந்த காலத்தில் நன்குணர்ந்து கொண்டு எதிர்த்து நின்ற வீர திராவிட மக்களைத்தான் பறையர், தீண்டப்படாதவர் ஊருக்கு வெளியே நிற்கக் கூடியவர், சண்டாளர்கள் எனபல பட்டப் பெயர்கள் சூட்டி அவர்களை இன்னும் ஆரியர்கள் வதைப்பதை கண்டுதான் வருகின்றோம். இக்கொடுமைகளை ஒழிக்க தோன்றிய பௌத்தமத மிருந்ததானது பலருக்குத் தெரியாதபடி

யாகி விட்டது. இத்தகைய ஆரிய வஞ்சகர்களின் வரலாறு காலத்திலிருந்து இன்று வரை கையாண்டுவரும் முறைகள் கணைகள், செய்துவரும் சூழ்ச்சிகள் முதலியவற்றை திராவிட மக்களுக்கு தெளிவுர எடுத்துக்கூறி சுயமரியாதையுடன் வாழ வழிவகுக்கும் நோக்குடன் தோன்றியது சுயமரியாதை இயக்கம். திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி ஒருவரால்தான் ஆரிய சூட்சியை வெட்டிசாய்க்க முடியும். வெள்ளத்தையும் கால முன்னேற்றத்தையும் யாருலாவது தடுக்க முடியுமா? இளமை மிகுந்த இளஞ்சிங்கங்களே அறிவின் சிகரம் ஆராய்ச்சியின் நிறைவு என்று சொல்லத் தக்க நம் பெரியார் அவர்கள் தம் முதிர்ந்த பருவத்தையும் பொருட்படுத்தாமல் இளஞ்சிங்கம் போன்று இன்றும் உழைத்து வருகின்றார். இளைஞர்களை தட்டி எழுப்பி களத்தின் நிறுத்தி தலைமை தாங்கிபோர் நடத்தி வருகின்றார். பெரியார் அவர்களின் குறிப்புப்படி நாம் நமது தொண்டை செய்ய வேண்டும் என்பது தான் எமது எண்ணம்.

சுயமரியாதை இயக்கம் திராவிடத்தின் தனிப்பெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் இடைவிடா உழைப்பின் பலனாக பட்டிதொட்டிகளிலும் சுயமரியாதை கொள்கைகள் பரவி பெருகி வருகின்றன. சுயமரியாதை இயக்கம் வைதீக வெறியை ஓரளவு தெளியவைத்தது. மதமெனும் இடுக்கில் சிக்கி சிதைந்த சமுதாயத்தை சீர் செய்து சேற்றிலிருந்த செந்தாமரையை எடுத்தது போல; தலைவர் பெரியார் மதமெனும் சேற்றிலே புதைந்து கிடந்த மக்களை வெளியேற்றினார். சமத்துவமாக சன்மார்க்க நெறியினராக சுதந்திரப் பிரியர்களாக வாழுங்கள். மும்மூர்த்தியுமில்லை அதற்கு தரகு செய்யமுப்பிரியும் தேவையில்லை. வேதங்கள் தேவையில்லை. அதற்கு தர்ப்பைகள் தேவையில்லை. அவை வெறும் சூது, ஏமாற்று வித்தை, படுமோசத்தை நம்பாதீர்கள் சிங்கமென வெளிகிளம்புங்கள். சேர்ந்து வாழுங்கள், வாளை ஏந்துங்கள் என்பது போன்ற கருத்துக்களைத் தந்த நமது தலைவர் பெரியார் வாழ்க.!

புத்தொலி பதிப்பகத்தின் வெளியீடுகள்!!

- நாடக இலக்கியத்திற்கோர் நவீனம்!
- அருணோதயம்!
- சுதந்திரவீரன் சிதம்பரம் பிள்ளை!

தீட்டியோர் :—

T. C. S. மணி

புத்தொலி பதிப்பகம்

தெப்பக்குளம், : : திருச்சி.

அழகிய முகப்புடன் விரைவில் வெளிவரும்!

"சிந்தனை சிற்பி"

தீட்டியோர் :—

R. R. நாதன்

திராவிடத் தந்தை பெரியார் ஈ. வே. ரா.

அவர்களின்

வாழ்க்கை வரலாறு

திராவிடம் காரியாலயம்

59, மணியக்காரத் தெரு, : : திருச்சி.

Visit

The Dress House

For

Best Tailoring and prompt Delivery

High class Tailors & out Fitters.

: Opposite :

WELLINGTON TALKIES

Big Bazar, : : *Trichinopoly.*

SENGUNTHA MITHRAN PRESS, MADRAS— 5-47-C.1000